2.2.19 S.T.C.1 /18 ம.சா.1 வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

நான் பி.காம்., ஆசிரியர் பயிற்சி முடித்துள்ளேன். என் கணவர் அரசு பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறார். மீனாட்சிசுந்தரம் என்பவர் எனக்கு சித்தப்பா உறவுமுறை. என் பெரியம்மாவுக்கு மீனாட்சிசுந்தரம் உறவினர் ஆவார். எதிரி என் சித்தப்பா மூலம்தான் அறிமுகமாகும். நான் ஆசிரியர் பணிக்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறேன் என்றால் சரிதான். நான் எதிரியை என் சித்தப்பா மீனாட்சிசுந்தரம் மூலமாக ஆசிரியர் பணிக்காக பணத்தை கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 2015ம் ஆண்டு நானும், எதிரியும் அருட்செல்வம் என்பவரின் வங்கி கணக்கில் ரூ.1 லட்சம் அரசு வேலைக்காக செலுத்தினோம் என்றால் சரியல்ல. அருட்செல்வம் என்பவரை எனக்கு யார் என்றே தெரியாது. அருட்செல்வம் என்பவர் தஞ்சாவூர் மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரியும் விபரம் தெரியுமா? என்றால் சரியல்ல. என்னிடம் எதிரி ஆரோக்கியம்தான் பணம் பெற்றார். அருட்செல்வத்தை யார் என்றே தெரியாது. அருட்செல்வம் என் கணவரிடம் 2015 டிசம்பரில் ரூ.70 ஆயிரம் பணம் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. 25.5.13 அன்று என்னிடம் எதிரி பணம் வாங்கிச்சென்றார். அன்றைய தேதியில் காசோலையை கொடுக்காமல் 20.8.17 அன்றுதான் எதிரி காசோலையை கொடுத்தார். 29.8.17 அன்று காசோலை திருப்பப்பட்டுவிட்டது. காசோலை திரும்பிய பிறகு உடனடியாக வழக்கறிவிப்பு கொடுக்கவில்லை. எதிரியை வீட்டில் சந்தித்து கேட்டபோது ஒருமாதத்தில் பணம் தந்துவிடுவதாகவும், 1 மாதம் கழித்து வசூலுக்கு போட்டு எடுத்துக்கொள்ளுமாறு கூறினார். எதிரியின் வீடு அரங்கசாலை, பசுமலை என்ற முகவரியில் உள்ளது. எதிரியின் வீடு வடக்குபார்த்து உள்ளது. எதிரியிடம் நான் ஒருலட்சம் கொடுக்கவில்லை என்றும், ஏற்கனவே, அரசு வேலைக்காக நானும் எதிரியும் அருட்செல்வத்திடம் பணம் கொடுத்திருந்தோம் என்றும், அப்போது என் கணவர் ஆதரவுக்காக பெற்ற காசோலையை என்மூலம் இவ்வழக்கை எதிரிமீது பொய்யாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. புதூர் காவல்நிலையத்தில் எதிரிமீது புகார் கொடுத்து அந்த விசாரணைக்கு நான் ஆஜரானேன். மேற்படி புகாரின் பேரில் ஆஜரான விசாரணைக்காக ஆவணம் தாக்கல் செய்யவில்லை. அந்த விசாரணையில் எதிரி மாற்றிக்கூறியதால் அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. அருட்செல்வத்திடம் என் கணவர் வேலை விசயமாக அடிக்கடி தொலைபேசயில் பேசியிருந்தார் என்றால் அதுபற்றி தெரியாது. அருட்செல்வத்திடம் நானும், என் கணவரும் தொலைபேசியில் அடிக்கடி தொடர்பு கொண்டிருந்தோம் என்றும், நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மருதுசாமி என் அப்பா ஆவார். மருதுசாமி எதிரிமீது காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா? என்றால் தெரியாது. என் அப்பா எதிரிமீது தாக்கல் செய்த காசோலை வழக்கு எனக்கு தெரியும் என்றும், தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் முதல்விசாரணையில் எதிரி பணத்தை பெற்றுக்கொண்டு 1 வாரத்தில் திருப்பிச்செலுத்திவிடுவதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அதேபோல் ஒருவாரத்தில் எதிரி பணத்தை திருப்பிக்கொடுப்பதாக என் தந்தையிடம் குறிப்பிட்ட விபரம் தெரியுமா? என்றால் தெரியாது. நானும்,

என் கணவரும் என் தந்தையும் சேர்ந்து எதிரியிடம் பணம் பறிக்கும் கெட்ட எண்ணத்தில் அவர் ஆதரவுக்காக கொடுத்த காசோலைகளை மோசடியாக பயன்படுத்தி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கையெழுத்து மட்டும் செய்து எதிரி கொடுத்த காசோலையை வாங்கிக்கொண்டு பொய்யாக இவ்வழக்கை எதிரிமீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிதான் காசோலையை தன் கைப்பட பூர்த்திசெய்து கொடுத்தார். அருட்செல்வம் என்பவரிடம் கொடுத்த ரூ.1 லட்சத்தில் 70 ஆயிரத்தை திருப்பிபெற்றுக்கொண்டு மீதமுள்ள ரூ.30 ஆயிரத்திற்கு அதரவுக்காக பெற்று வைத்துள்ள வெற்றுக்காசோலைகளை வைத்து பொய்யாக இவ்வழக்கை எதிரிமீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு ரூ.1 லட்சம் கொடுக்க என் நகைகளை சிண்டிகேட் வங்கி மூன்றுமாவடி கிளையில் அடகு வைத்துத்தான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். மேற்படி நகை அடகு வைத்ததற்கான ஆவணத்தை வழக்கு தாக்கல் செய்யும்போது தாக்கல் செய்தேனா? என்றால் இல்லை. உண்மையில் என்னிடம் அடகு ரசீது இருந்தால் அதை வழக்கு தாக்கல் செய்யும் காலத்திலேயே தாக்கல் செய்திருப்பேன் என்றும, தற்போது பின்யோனையின் பேரில் அவ்வாறு அடகு வைத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் சித்தப்பாவான மீனாட்சிசுந்தரத்தை அழைத்து விசாரித்தால் உண்மை தெரியும் என்றால் சரியல்ல. அவர் வெளிநாட்டில் அவரது மகனுடன் இருக்கிறார். எதிரி அருட்செல்வம் என்பவருக்கு பணம் கொடுத்தபோது எதிரி ஆதரவாக கொடுத்த காசோலைகளை என் கணவர் என்மூலமும், என் தந்தை மூலமும் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.